## ஊரீசு கல்லூரி பட்டமளிப்பு விழா

# மாணவர்களின் வளர்ச்சிக்கு செயல்முறை சார்ந்த கல்வி உறுதுணையாக இருக்கும்



வேலூர் ஊரீசு கல்லூரியில் 36வது பட்டமளிப்பு விழாவில் மாணவர்களுக்கு பட்டங்களை வேலூர் மண்டல கல்லூரி கல்வி இணை இயக்குனர் எழிலன் வழங்கினார். உடன் ஊரீசு கல்லூரி ஆட்சி மன்ற குழு தலைவரும், வேலூர் சிஎஸ்ஐ பேராயருமான ஷர்மா நித்தியானந்தம், முதல்வர் நெல்சன் விமலநாதன்.

## கல்லூரி கல்வி இணை இயக்குனர் பேச்சு

**வேலூர்,நவ.1:** செயல்முறை சார்ந்த கல்வி மாணவர்களின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் என்று ஊரீசு கல்லூரி பட்டமளிப்பு விழாவில் கல்லூரி கல்வி இணை இயக்குனர் பேசினார்.

வேலூர் ஊரீசு கல்லூரியில் 36வது பட்டமளிப்பு விழா கல்லூரியின் காபு அரங்கில் நேற்று நடந்தது. விழாவுக்கு ஊரீசு கல்லூரி ஆட்சி மன்ற குழு தலைவரும், வேலூர் சிஎஸ்ஐ பேராயருமான ஷர்மா நித்தியானந்தம் தலைமை தாங்கினார். முதல்வர் நெல்சன் விமலநாதன் முன்னிலை வகித்தார். பட்டமளிப்பு விழா குழு தலைவர் தியோடர் ராஜ்குமார் வரவேற்றார். விழாவிற்கு சிறப்பு அழைப்பாளராக வேலூர் மண்டல கல்லூரி கல்வி இணை இயக்குனர் எழிலன் கலந்து கொண்டு மாணவ, மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கி பேசியதாவது: இந்தியாவில் உயர்கல்வி பயில்பவர்கள் 24.3 சதவீதமாக உள்ளனர். தமிழகத்தில் அது 49.8 சதவீதமாக உள்ளது. தரமான கல்வி கிடைப்பதில் பற்றாக்குறை உள்ளது.

பட்டம் பெறும் மாணவர்களின் தனித்திறமை இல்லாததால் குறைந்த சம்பளத்தில் கிடைக்கும் வேலையை செய்து வருகின்றனர். மாணவர்கள் தனித்திறமையை வளர்த்துக்கொண்டு நேர்மை, ஒழுக்கத்துடன் பயில வேண்டும். செயல்முறை சார்ந்த கல்வி மாணவர்களின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும். நாட்டின் எதிர்கால தேவைகளுக்கு ஏற்ப புதிய கருவிகளை மாணவர்கள் கண்டுபிடிக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

விழாவில், பல்கலைக்கழக அளவில் தங்கப்பதக்கம் வென்ற 13 மாணவர்கள் உட்பட 600 மாணவர்களுக்கு பட்டங்கள் வழங்கப்பட்டன. இதில் துணை முதல்வர்கள் ஆனி கமலா ப்ளாரன்ஸ் (காலை), ரசல் பிரேம்ராஜ் பென்ஜமின், நிதியாளுனர் காலேப் நோபுள் சுந்தர், துறை தலைவர்கள், பேராசிரியர்கள் மாணவ, மாணவிகள் மற்றும் பெற்றோர்கள் கலந்துக் கொண்டனர்.